**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 153/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : காளிமுத்து | | Caste | : |
| Father/Husband Name | : மகாலிங்கம் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(A1 Present. A2 Died.)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 13.08.2024**

**முதல் விசாரணை**

நான் அகிலாண்டபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மூணான்டிபட்படி ரயில்வே கேட் அருகே மெக்கானிக் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். அதன் பெயர் விநாயாக மோட்டார் ஆகும். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் நினைவில்லை, காலை 08.00 மணியளவில் மூணான்டிபட்டி அருகே நான் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் சென்ற அ.சா.1 கீழே விழுந்துவிட்டார். என்னவென்று அ.சா.1யிடம் விசாரித்தபோது, தன்னிடம் இருந்து நகையை பறித்துவிட்டதாக அவர் கூறினார். எனவே நாங்கள் நகை பறித்தவர்களை விரட்டிகொண்டு சென்றோம். எங்களால் அவர்களை பிடிக்க முடியவில்லை. அ.சா.1 சம்பவம் பற்றி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் சம்பவ இடத்தில் வைத்து மறுநாள் விசாரணை செய்தார்கள். பெண் சார்பு ஆய்வாளர் என்னிடம் விசாரணை நடத்தினார். என்னிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. ஒரு முறைதான் விசாரணை செய்தார்கள். சார்பு ஆய்வாளருடன் 3 போலீசார் வந்தார்கள். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக போலீசார் சொன்னதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.13 14:10:45 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 153/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சுகுணா** | Caste | : |
| Father/Husband Name | : **பால்பாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1 Present. A2 Died.)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 13.08.2024**

**முதல் விசாரணை**

நான் சத்தியநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கேரன் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.08.2019 ஆம் தேதியில் காலை 08.00 மணியளவில் நான் வேலைக்காக பள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது மூனான்டிபட்டிக்கு அருகே உள்ள ஒர்க் ஷாப் அருகே எனக்கு பின்னால் இருசக்கரவாகனத்தில் பின் தொடர்ந்து வந்து, அதில் பின்னால் அமர்ந்திருந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 2 1/2 பவுன் தங்க நகையை பறித்துவிட்டார். நான் கத்தி சத்தம்போட்டேன். ஒர்க் ஷாப்பை சேர்ந்தவர் காளிமுத்து என்பவர் என் நகையை பறித்தவர்களை விரட்டி சென்றார். ஆனால் அவர்களை பிடிக்க முடியவில்லை. அவர்கள்

தப்பிவிட்டார்கள். நான் உடனே சென்று செக்கானூரணி காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான்கு நாட்கள் கழித்து காவல் நிலையத்திருந்து என்னை அழைத்ததன்பேரில் நான் காவல் நிலையம் சென்று, என்னிடம் நகை பறித்தவர்களை போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். நான் அவர்களை அடையாளம் காண்பித்தேன். பின்னர் என் நகையையும் அடையாளம் காண்பித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள நகைதான், சம்பவ தினத்தில் என்னிடம் பறிக்கப்பட்ட நகை ஆகும். அதை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். அந்த புகைப்படத்தில் உள்ள நகை **(அ.சா.பொ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தின்போது என் நகையை பறித்தவர் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் புகார் கொடுத்தது பெண் அதிகாரியிடம். சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் எதிரிகளை பார்த்தேன். போலீசார் சொல்லிதான் எதிரிகள் என்னிடம் நகை பறித்தவர்கள் என்று எனக்கு தெரியும். போலீசார் என்னிடம் 2 முறை விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையின்போது நான் சொன்னதை வெள்ளை பேப்பரில் எழுதி கொண்டார்கள். எனது வாக்குமூலத்தை பெண் அதிகாரி எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் இரண்டு முறை விசாரணை செய்யும்போது கையெழுத்து போட்டேன். நான் சொல்வதுபோல்

எதிரி என் நகையை பறிக்க வில்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக போலீசார் சொன்னதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.13 14:10:53 +0530

**நீதித்துறை நடுவர் எண்−2,**
**உசிலம்பட்டி.**